செ.வெ.எண்: 466 நாள்: 17.07.2020

**சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நிவாரண உதவித்தொகையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப.,அவர்கள் நேரில் சென்று வழங்கி, ஆறுதல் தெரிவித்தார்.**

---

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம், வடக்காட்டுப்பட்டி கிராமத்தில் சாலை விபத்தில் இறந்தவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி திரு.K.பழனிச்சாமி அவர்கள் உத்தரவிற்கிணங்க மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (17.07.2020) உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்து, நிவாரண உதவித்தொகையினை வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம், வடக்காட்டுப்பட்டியைச் சேர்ந்த மிதுன்கிஷோர், அரவிந்த், பரத் ஆகிய மூன்று நபர்கள் திருச்சி-மதுரை தேசிய நெடுஞ்சாலையில், வடக்காட்டுப்பட்டி அருகே 11.07.2020 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் மரணம் அடைந்தார்கள். இதுகுறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்களுக்கு தகவல் தெரிந்தவுடன் உடனடியாக உயிரிழந்தவர்களின் இல்லங்களுக்கு நேரடியாக சென்று அவர்கள் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியதுடன், நிவாரணம் வழங்கிடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்கள்.

இதனை தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விபத்தில் இறந்தவர்களின் குடும்பத்திற்கு தனது இரங்கலை தெரிவித்ததுடன் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.1 லட்சம்

நிவாரண உதவித்தொகை வழங்க உத்தரவிட்டார்கள். அந்தவகையில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று உயிரிழந்த குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி தலா ரூ.1 லட்சம் நிவாரண உதவியினை இன்று (17.07.2020) வழங்கினார்கள்.

இந்நிகழ்வின் போது இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் (பொ) ராமகிருஷ்ணன், வட்டாட்சியர் சதீஸ் சரவணக்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

---------------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**